# TNPSC GROUP I – TEST BATCH 2022
# TEST XIX – UNIT IX PART I DEVELOPMENT ADMINISTRATION

1. Choose the correct statements about 2011 census
   I. The national average of population density was 382 persons per sq.km
   II. The population density of Tamilnadu was 555 persons per sq.km
   III. Tamilnadu ranks $10^{th}$ in the population density at national level
   a. I, II  b. I, III  c. II, III
   d. All of these  e. Answer not known
   2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு குறித்த சரியான கூற்றுகளை தேர்க
   I. தேசிய சராசரி மக்கள்தொகை அடர்த்தியானது சதுர கிலோ மீட்டருக்கு 382 நபர்களாவர்
   II. தமிழ்நாட்டின் மக்கள்தொகை அடர்த்தியானது சதுர கிலோ மீட்டருக்கு 555 நபர்களாவர்
   III. தமிழ்நாடு தேசிய மக்கள்தொகை அடர்த்தியில் 10வது இடம் வகிக்கிறது
   a. I, II  b. I, III  c. II, III
   d. இவை அனைத்தும்  e. விடை தெரியவில்லை

2. How many pairs are correctly matched?
   I. Human Development Index – education, health and income
   II. Child Development Index – Education, Health and nutritional status
   III. Multidimensional Poverty Index – drinking water, fuel and sanitation
   a. One pair  b. Two pairs  c. Three pairs
   d. None of these  e. Answer not known
   எத்தனை இணைகள் சரியாக பொருந்தியுள்ளன?
   I. மனித வளர்ச்சிக் குறியீடு – கல்வி, நலம் மற்றும் வருமானம்
   II. குழந்தைகள் மேம்பாட்டுக் குறியீடு – கல்வி, நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலை
   III. பலபரிமாண வறுமைக் குறியீடு – குடிநீர், எரிபொருள் மற்றும் சுகாதாரம்
   a. ஓர் இணை  b. இரு இணைகள்  c. மூன்று இணைகள்
   d. ஏதுமில்லை  e. விடை தெரியவில்லை

3. Arrange the following districts in decending order based on Human Development Index (Higher to lower)
   I. Kanyakumari  II. Thoothukudi  III. Chennai
   IV. Kanchipuram  V. Virudhunagar
   a. I, II, III, IV, V  b. I, V, II, III, IV  c. I, III, II, V, IV
   d. I, IV, III, II, V  e. Answer not known
   பின்வரும் மாவட்டங்களை மனித வளர்ச்சிக் குறியீட்டின் அடிப்படையில் இறங்குவரிசையில் வரிசைப்படுத்துக
   I. கன்னியாகுமரி  II. தூத்துக்குடி  III. சென்னை
   IV. காஞ்சிபுரம்  V. விருதுநகர்
   a. I, II, III, IV, V  b. I, V, II, III, IV  c. I, III, II, V, IV
   d. I, IV, III, II, V  e. விடை தெரியவில்லை

4. Which of the following districts of Tamilnadu ranked lowest in Human Development Index?
a. Villupuram b. Theni c. Perambalur d. Ariyalur e. Answer not known
பின்வரும் மாவட்டங்களில் மனித வளர்ச்சி குறியீட்டில் தமிழ்நாட்டின் எந்த மாவட்டம் மிகக்குறைந்த இடத்தில் உள்ளது?
a. விழுப்புரம் b. தேனி c. பெரம்பலூர் d. அரியலூர் e. விடை தெரியவில்லை

5. How many pairs are correctly matched?
I. First rank in Gender Inequality Index – Nilgiris
II. Last rank in Gender Inequality Index – Ariyalur
III. First rank in Child Development Index – Kanyakumari
IV. Last rank in Child Development Index – Perambalur
a. One pair b. Two pairs c. Three pairs
d. Four pairs e. Answer not known
எத்தனை இணைகள் சரியாக பொருந்தியுள்ளன?
I. பாலின சமத்துவமின்மை குறியீட்டில் முதலிடம் - நீலகிரி
II. பாலின சமத்துவமின்மை குறியீட்டில் கடைசி இடம் - அரியலூர்
III. குழந்தைகள் மேம்பாட்டுக் குறியீட்டில் முதலிடம் - கன்னியாகுமரி
IV. குழந்தைகள் மேம்பாட்டுக் குறியீட்டில் கடைசி இடம் - பெரம்பலூர்
a. ஓர் இணை b. இரு இணைகள் c. மூன்று இணைகள்
d. நான்கு இணைகள் e. விடை தெரியவில்லை

6. Which of the following district ranked first in Multidimensional Poverty Index?
a. Chennai b. Kancheepuram c. Cuddalore
d. Coimbatore e. Answer not known
பலபரிமாண வறுமைக் குறியீட்டில் பின்வரும் எந்த மாவட்டம் முதலிடத்தில் உள்ளது?
a. சென்னை b. காஞ்சிபுரம் c. கடலூர்
d. கோயம்புத்தூர் e. விடை தெரியவில்லை

7. Which of the following district ranked last in Food Security Index?
a. Nilgiris b. Ramanathapuram c. Virudhunagar
d. Perambalur e. Answer not known
உணவுப்பாதுகாப்பு குறியீட்டில் பின்வரும் எந்த மாவட்டம் கடைசி இடத்தில் உள்ளது?
a. நீலகிரி b. இராமநாதபுரம் c. விருதுநகர்
d. பெரம்பலூர் e. விடை தெரியவில்லை

8. Choose the correct statements about Tamilnadu
I. Gross Enrollment Rate is in higher education is 43% as per 2013-14
II. It ranks first among all Indian states in context of the number of universities, Technical Universities
III. The State Skill Development Mission acts as a single agency to conduct training programs for qualifications upto 12th std and accredits training institutions.
a. I, II b. I, III c. II, III
d. All the above e. Answer not known
தமிழ்நாடு குறித்த சரியான கூற்றுகளை தேர்க
I. 2013-14இன் படி உயர்கல்வியில் மொத்த சேர்க்கை விகிதம் 43 சதவீதமாகும்
II. பல்கலைகழகங்கள், தொழில்நுட்ப பல்கலைகழகங்கள் எண்ணிக்கையில் அனைத்து இந்திய மாநிலங்களிலும் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது
III. மாநில திறன் மேம்பாட்டு இயக்கமானது 12ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்துவதற்கும் பயிற்சி நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கும் ஒரு முகமையாக செயல்படுகிறது.
a. I, II b. I, III c. II, III
d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை

9. Choose the correct statements about Tamilnadu
I. Female Enrollement in M.Phil is higher than male
II. The highest female work participation rate is in Perambalur
a. I b. II c. I, II
d. None of these e. Answer not known
தமிழ்நாடு குறித்த சரியான கூற்றுகளை தேர்க
I. M.Phil சேர்க்கையில் ஆண்களை விட பெண்களே அதிகம்
II. பெரம்பலூரில் தான் பெண்களில் அதிக வேலைப் பங்கேற்பு விகிதம் உள்ளது.
a. I b. II c. I, II
d. ஏதுமில்லை e. விடை தெரியவில்லை

10. Choose the correct statements about Tamil Nadu state planning commission
I. It was constituted on 25 May 1971
II. It has 7 technical divisions
a. I only b. II only c. Both I and II
d. None of these e. Answer not known
தமிழ்நாடு திட்டக்குழு குறித்த சரியான கூற்றுகளை தேர்க
I. இது 25 மே, 1971 அன்று அமைக்கப்பட்டது
II. இது 7 தொழில்நுட்ப பிரிவுகளை கொண்டுள்ளது
a. I மட்டும் b. II மட்டும் c. I மற்றும் II
d. இவை ஏதுமில்லை e. விடை தெரியவில்லை

11. Choose the correct statements about Tamil Nadu
I. Tamilnadu is one of the highly urbanised states with 48.45% of the population living in urban areas
II. The litracy rate of Tamilnadu is 80.69% as per 2011 census
a. I only b. II only c. Both I and II
d. None of these e. Answer not known
தமிழ்நாடு குறித்த சரியான கூற்றுகளைத் தேர்க
I. 48.45 சதவீதம் நகர்ப்புற மக்கள்தொகையை கொண்டு தமிழ்நாடு உயர் நகர்மய மாநிலமாக விளங்குகிறது.
II. 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாடு 80.69% எழுத்தறிவினை கொண்டுள்ளது
a. I மட்டும் b. II மட்டும் c. I மற்றும் II
d. ஏதுமில்லை e. விடை தெரியவில்லை

12. Choose the correct statements
I. As per the constitution 73rd Amendment Act 1992, sanitation is included in the 11th schedule
II. Accordingly, Gram Panchayats have a pivotal role in the implementation of total sanitation campaign
III. The TSC will be implemented by the Panchayati Raj institutions at all levels.
a. I, II b. I, III c. I, II, III
d. II, III e. Answer not known
சரியான கூற்றுகளைத் தேர்க
I. 1992ஆம் ஆண்டு 73வது சட்டத்திருத்த சட்டத்தின் படி, சுகாதாரம் 11வது அட்டவணையில் சேர்க்கப்பட்டது
II. அதன்படி, முழு சுகாதார இயக்கத்தை நடைமுறைப்படுத்துவதில் கிராம பஞ்சாயத்துக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.
III. பஞ்சாயத்துராஜ் அமைப்புகள் முழு சுகாதார இயக்கத்தை அனைத்து நிலைகளிலும் நடைமுறைப்படுத்தும்.
a. I, II b. I, III c. I, II, III
d. II, III e. விடை தெரியவில்லை

13. Choose the correct statements about the Clean Village Award
I. It is a state award conferred on the village panchayats leader, for achieving clean environment, access to toilet facilities in the village
II. Similar to this award "Nirmal Gram Puraskar" is being awarded by the Union Government
a. I only b. II only c. Both I and II
d. None of these e. Answer not known
தூய கிராம விருது தொடர்பான சரியான கூற்றுகளை தேர்க
I. இது மாநில அளவில் சுத்தமான சுற்றுச்சூழலை பேணுதற்கும், கிராமத்தில் கழிவறை வசதிகளை ஏற்படுத்தியதற்கும் கிராம பஞ்சாயத்து தலைவருக்கு வழங்கப்படும் விருதாகும்.
II. இவ்விருதினை போலவே மத்திய அரசு 'நிர்மல் கிராம புரஸ்கார்' விருதினை வழங்குகிறது.
a. I மட்டும் b. II மட்டும் c. I மற்றும் II
d. ஏதுமில்லை e. விடை தெரியவில்லை

14. The Government of Tamilnadu has formulated strategies to improve access to sanitation in association with
a. ADB b. UNICEF c. UNESCO
d. AIIB e. Answer not known
________ உடன் இணைந்து சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான உத்திகளை தமிழ்நாடு அரசு வகுத்துள்ளது.
a. ADB b. UNICEF c. UNESCO
d. AIIB e. விடை தெரியவில்லை

15. Choose the correct statements about Human Development Index
I. It was developed by Mahbub Ul Haq and Amartyasen in 1990
II. It was published by United Nations Development Programme
III. Human Development Report of Tamil Nadu following the UNDP Methodology
a. I, II b. I, III c. II, III
d. All the above e. Answer not known
மனித வளர்ச்சிக் குறியீடு குறித்த சரியான கூற்றுகளை தேர்க
I. இது 1990ஆம் ஆண்டு மஹ்பூப் உல் அக் மற்றும் அமர்த்தியா சென் ஆகியோரால் உருவாக்கப்பட்டது.
II. இது ஐக்கியநாடுகள் வளர்ச்சி திட்டத்தால் (UNDP) வெளியிடப்பட்டது.
III. தமிழ்நாடு UNDP மாற்றியைப் பின்பற்றி மனித வளர்ச்சி அறிக்கையினை தயாரிக்கிறது
a. I, II b. I, III c. II, III
d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை

16. Which of the following were the indicators of Gender Inequality Index?
I. Maternal Mortality Ratio
II. Adolescent Birth Rate
III. Women Empowerment
IV. Labour Force Participation Rate
a. I, IV b. I, II, IV c. II, III, IV
d. All of these e. Answer not known
பாலின சமத்துவமின்மை குறியீடு காரணிகளை கண்டறிக
I. தாய் இறப்பு விகிதம்
II. இளம்பருவ பிறப்பு விகிதம்
III. பெண்களுக்கு அதிகாரமளித்தல்
IV. தொழிலாளர் பங்கேற்பு விகிதம்
a. I, IV b. I, II, IV c. II, III, IV
d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை

17. How many pairs are correctly matched?
I. Protection of women from domestic violence Act – 2005
II. Dowry Prohbition Act – 1961
III. The Prohibtion of Child marriage Act – 2005
IV. Maternity benefit Act – 1961
a. One pair b. Two pairs c. Three pairs
d. Four pairs e. Answer not known
எத்தனை இணைகள் சரியாக பொருந்தியுள்ளன?
I. குடும்ப வன்முறையில் இருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் - 2005
II. வரதட்சணை தடுப்பு சட்டம் - 1961
III. குழந்தை திருமணத் தடைச்சட்டம் - 2005
IV. மகப்பேறு நலச்சட்டம் - 1961
a. ஓர் இணை b. இரு இணைகள் c. மூன்று இணைகள்
d. நான்கு இணைகள் e. விடை தெரியவில்லை

18. Choose the correct statements about National Rural Economic Transformation Project
I. This Scheme was introduced by Government of india in 2019-20
II. It was Funded by Government of India and Tamilnadu in the ratio of 60:40
a. I only b. II only c. Both I and II
d. None of these e. Answer not known
தேசிய கிராமப்புற பொருளாதார புத்தாக்க திட்டம் பற்றிய சரியான கூற்றுகளைத் தேர்வு செய்க
I. இத்திட்டம் இந்திய அரசால் 2019-20 இல் தொடங்கப்பட்டது
II. இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு முறையே 60:40 என்ற விகிதத்தில் இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கின்றது.
a. I மட்டும் b. II மட்டும் c. I மற்றும் II
d. இவை ஏதுமில்லை e. விடை தெரியவில்லை

19. Choose the correct statements about Rashtriya Mahila Kosh
I. It was established in 1992
II. It aims to provide Microcredit to women
III. It is a national credit Fund for women under the control of the Ministry of women and child development
a. I, II b. I, III c. II, III
d. All of these e. answer not known
ராஷ்ட்ரிய மகிளா கோஷ் பற்றிய சரியான கூற்றுகளைத் தேர்வு செய்க
I. இது 1992இல் தொடங்கப்பட்டது
II. இது பெண்களுக்கான குறுகடன் அளிப்பதன் நோக்கில் தொடங்கப்பட்டது
III. இது மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் செயல்படுத்தப்படும் ஒரு தேசிய அளவிலான மகளிருக்கான கடன் வழங்கும் நிதியம்
a. I, II b. I, III c. II, III
d. மேற்கூறிய அனைத்தும் e. விடை தெரியவில்லை

20. Mahalir Sakthi Maiyyam Scheme was introduced by Government of India in the year
a. 1992-1993 b. 1993-1994 c. 2012-2013
d. 2017 – 2018 e. Answer not known
மகளிர் சக்தி மையம் திட்டம் இந்திய அரசால் தொடங்கப்பட்ட ஆண்டு
a. 1992-1993 b. 1993-1994 c. 2012-2013
d. 2017 – 2018 e. விடை தெரியவில்லை

21. Choose the correct statements about Avvaiyar Award
I. Every year it was awarded on 8 March, the International Women's Day
II. It includes an 4 gram gold medal a cheque for Rs.1 lakh, a shawl and a citation

a. I only b. II only c. Both I and II
d. None of these e. Answer not known

ஔவையார் விருது பற்றிய சரியான கூற்றுகளைத் தேர்வு செய்க

I. ஒவ்வொரு ஆண்டும் உலக மகளிர் தினமான மார்ச் 8 அன்று இவ்விருது வழங்கப்படுகிறது.
II. இவ்விருது பெறுபவருக்கு 4 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் ரூ.1 லட்சம் காசோலை, சால்வை மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படுகிறது.

a. I மட்டும் b. II மட்டும் c. I மற்றும் II
d. ஏதுமில்லை e. விடை தெரியவில்லை

22. Which of the following provisions are correct regarding protection of women from domestic violence act

I. The Act ensures a woman's right to reside in her matrimonial home
II. Judgements within 30 days of filing of the case
III. Under this act, protection officers have been appointed by government to help the aggrieved woman in filing the case

a. I, II b. I, III c. II, III
d. All of these e. Answer not known

பின்வருவனவற்றுள் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டத்தின் அம்சங்களுள் சரியானவற்றைத் தேர்வு செய்க

I. இச்சட்டம் பெண்கள் புகுந்த வீட்டில் வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்கிறது.
II. வழக்கு பதிவு செய்த 30 நாட்களுக்குள் நீதிமன்ற தீர்ப்பினை வழங்குதல்
III. இச்சட்டத்தின்படி, பாதிக்கப்பட் பெண்ணிற்கு நீதிமன்றத்தில் வழக்கு தொடர உதவியாக பாதுகாப்பு அதிகாரிகள் அரசால் நியமிக்கப்படுவர்

a. I, II b. I, III c. II, III
d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை

23. Choose the correct statements about Ujjawala Scheme

I. It was launched in 2007
II. It is a comprehensive scheme for prevention of trafficking among women and children

a. I only b. II only c. Both I and II
d. None of these e. Answer not known

உஜ்ஜவாலா திட்டம் பற்றிய சரியான கூற்றுகளைத் தேர்வு செய்க

I. இத்திட்டம் 2007இல் தொடங்கப்பட்டது
II. குழந்தைகள் மற்றும் பெண்கள் பாலியல் சுரண்டலுக்கு ஆளாக்கப்படுவதை தவிர்ப்பதற்கான விரிவான திட்டம்

a. I மட்டும் b. II மட்டும் c. I மற்றும் II
d. ஏதுமில்லை d. விடை தெரியவில்லை

24. Choose the correct statements about SAKHI Scheme

I. Also known as one stop centre scheme
II. It was started in 2016
III. It provides integrated support and assistance to women affected by violence both in private and public spaces under one roof

a. I, II b. I, III c. II, III
d. All of these e. Answer not known

சகி (SAKHI) திட்டம் பற்றிய சரியான கூற்றுகளைத் தேர்வு செய்க

I. இத்திட்டம் ஒற்றை நிறுத்த மையம் திட்டம் என்றும் அழைக்கப்படுகின்றது
II. இத்திட்டம் 2016இல் தொடங்கப்பட்டது
III. தனியார் மற்றும் பொது (இடங்களில்) வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான ஒருங்கிணைந்த உதவி மற்றும் ஆதரவினை அளிக்கின்றது.

a. I, II b. I, III c. II, III
d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை

25. Choose the correct statements about Nirbhaya Fund

I. It was announced for the first time in Union budget 2016-17

II. The corpus was to be utilised for upholding safety and dignity of women

III. The fund is administered by department of economic affairs

a. I, II b. I, III c. II, III

d. All of these e. Answer not known

நிர்பயா நிதி பற்றிய சரியான கூற்றுகளைத் தேர்வு செய்க

I. இந்நிதி 2016-17 ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் முதல்முறையாக அறிவிக்கப்பட்டது.

II. இந்நிதி பெண்களின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை நிலைநிறுத்துவதற்காக பயன்படுத்தப்படுகிறது

III. இந்நிதி பொருளாதார விவகாரங்கள் துறையினால் நிர்வகிக்கப்படுகிறது.

a. I, II b. I, III c. II, III

d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை

26. 6 women or 8 men can construct a room in 86 days. How long will it take for 7 women and 5 men to do the same type of room?

a. 8 days b. 16 days c. 48 days

d. 63 days e. Answer not known

6 பெண்கள் அல்லது 8 ஆண்கள் ஓர் அறையை 86 நாள்களில் கட்டி முடிப்பர். அது போன்ற அறையை 7 பெண்கள் மற்றும் 5 ஆண்கள் கட்டி முடிக்க எத்தனை நாள்கள் ஆகம்.

a. 8 நாட்கள் b. 16 நாட்கள் c. 48 நாட்கள்

d. 63 நாட்கள் e. விடை தெரியவில்லை

27. A alone can do a piece of work in 35 days. If B is 40% more efficient than A, then B will finish the work in ___________days.

a. 21 days b. 25 days c. 49 days

d. 60 days e. Answer not known

A என்பவர் தனியே ஒரு வேலையை 35 நாள்களில் முடிப்பார். B ஆனவர், A ஐ விட 40% கூடுதல் திறன் வாய்ந்தவர் எனில், B ஆனவர் அந்த வேலையை __________ நாள்களில் முடிப்பார்.

a. 21 நாட்கள் b. 25 நாட்கள் c. 49 நாட்கள்

d. 60 நாட்கள் e. விடை தெரியவில்லை

28. Neelaveni goes by bi-cycle to her school every day. Her average speed is 12km/hr and she reaches school in 20 minutes. What is the increase in speed, if she reaches the school in 15 minutes?

a. 4 km/hr b. 8 km/hr c. 1 km/hr d. 5 km/hr e. Answer not known

நீலவேணி தினந்தோறும் மிதிவண்டியில் பள்ளிக்குச் செல்கிறாள். அவளது சராசரி வேகம் 12 கி.மீ / மணி ஆக இருந்தால், அவள் பள்ளியைச் சென்றடைய 20 நிமிடங்கள் ஆகிறது. அவள் 15 நிமிடத்தில் பள்ளியைச் சென்றடைந்தால் அவளது அதிகரித்த வேகம் எவ்வளவு?

a. 4 கி.மீ / மணி b. 8 கி.மீ / மணி c. 1 கி.மீ / மணி

d. 5 கி.மீ / மணி e. விடை தெரியவில்லை

29. Carpenter A takes 15 minutes to fit the parts of a chair while Carpenter B takes 3 minutes more than A to do the same work. Working together, how long will it take for them to fit the parts for 22 chairs?

a. 30 minutes b. 1 hour c. $1\frac{1}{2}$ hours

d. 3 hours e. Answer not known

தச்சர் A ஆனவர் ஒரு நாற்காலியின் பாகங்களைப் பொருத்த 15 நிமிடங்கள் எடுத்துக் கொள்கிறார். அதே வேலையைச் செய்ய தச்சர் B ஆனவர் தச்சர் A ஐ விட 3 நிமிடங்கள் கூடுதலாக எடுத்துக் கொள்கிறார். இருவரும் இணைந்து வேலைச் செய்து 22 நாற்காலிகளின் பாகங்களைப் பொருத்த எவ்வளவு நேரமாகும்?

a. 30 minutes b. 1 hour c. $1\frac{1}{2}$ hours

d. 3 hours e. விடை தெரியவில்லை

30. A and B can do a piece of work in 12 days and 9 days respectively. They work on alternate days starting with A on the first day. In how many days will the work be completed?

a. $10\frac{1}{2}$ days b. $10\frac{1}{3}$ days c. $10\frac{1}{4}$ days

d. $10\frac{2}{3}$ days e. Answer not known

A மற்றும் B ஆகியோர் ஒரு வேலையை முறையே 12 நாள்கள் மற்றும் 9 நாள்களில் செய்வர் முதல் நாள் A ஐக் கொண்டு வேலையைத் தொடங்கி அடுத்தடுத்த நாள்களில் இருவரும் வேலையை செய்கின்றனர் எனில், வேலையானது எத்தனை நாள்களில் முடியும்?

a. $10\frac{1}{2}$ நாட்கள் b. $10\frac{1}{3}$ நாட்கள் c. $10\frac{1}{4}$ நாட்கள்

d. $10\frac{2}{3}$ நாட்கள் e. விடை தெரியவில்லை

31. Choose the correct statements about Janani Suraksha Yojana

I. Janani Suraksha Yojana is a safe motherhood intervention under the National Rural Health Mission

II. It is being implemented since April 2005

a. I only b. II only c. Both I and II

d. None of these e. Answer not known

ஜனனி சுரக்ஷா யோஜனா பற்றிய சரியான கூற்றுகளைத் தேர்வு செய்க

I. ஜனனி சுரக்ஷா யோஜனா என்பது தேசிய ஊரக சுகாதார திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட தாய்மார்களின் பாதுகாப்பிற்கான திட்டமாகும்.

II. இத்திட்டம் ஏப்ரல் 2005 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது

a. I மட்டும் b. II மட்டும் c. I மற்றும் II

d. ஏதுமில்லை e. விடை தெரியவில்லை

32. How many pairs are incorrectly matched?

I. Food Safety and Standard Act – 2006

II. Prevention of Food Adulteration Act – 1954

III. Food Safety and Standards Regulations – 2011

a. One pair b. Two pairs c. Three pairs

d. None of these e. Answer not known

எத்தனை இணைகள் தவறாகப் பொருந்தியுள்ளன?

I. உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் சட்டம் - 2006

II. உணவு கலப்படம் தடுப்புச் சட்டம் - 1954

III. உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலை கட்டுப்பாடுகள் - 2011

a. ஒரு இணை b. இரண்டு இணைகள் c. மூன்று இணைகள்

d. எதுவும் இல்லை e. விடை தெரியவில்லை

33. Choose the correct statements about state commission on population

I. It was constituted to oversee and review state population policy 2007 in the state

II. It was established under the chairmanship of chief minister of Tamil nadu

a. I only b. II only c. Both I and II

d. None of these e. Answer not known

மக்கள் தொகை குறித்த மாநில ஆணையம் பற்றிய சரியான கூற்றுகளை தேர்ந்தெடுக்கவும்

I. இது மாநிலத்தில் மாநில மக்கள்தொகைக் கொள்கை 2007 ஐ மேற்பார்வையிடவும் மறுபரிசீலனை செய்யவும் உருவாக்கப்பட்டது

II. இது தமிழக முதல்வர் தலைமையில் நிறுவப்பட்டது

a. I மட்டும் b. II மட்டும் c. I மற்றும் II

d. எதுவும் இல்லை e. விடை தெரியவில்லை

34. Choose the incorrect statements about ESI Scheme

I. It was framed in according with the provision of the ESI Act – 1950

II. It was first inaugurated in Tamilnadu in 1955

a. I only b. II only c. Both I and II

d. None of these e. Answer not known

ESI திட்டம் பற்றிய தவறான கூற்றுகளை தேர்ந்தெடுக்கவும்

I. இது ESI சட்டம் 1950 இன் விதியின்படி வடிவமைக்கப்பட்டது

II. இது முதன்முதலில் தமிழ்நாட்டில் 1955 இல் திறக்கப்பட்டது

a. I மட்டும் b. II மட்டும் c. I மற்றும் II

d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

35. The Medical Services Recruitment Board was constituted by the Government of Tamilnadu in

a. 2010 b. 2011 c. 2012 d. 2013 e. Answer not known

மருத்துவப் பணிகள் ஆட்சேர்ப்பு வாரியம் தமிழக அரசால் உருவாக்கப்பட்ட ஆண்டு

a. 2010 b. 2011 c. 2012 d. 2013 e. விடை தெரியவில்லை

36. Choose the correct statements about Tamilnadu Health System Reform Program

I. It is a world bank supported project

II. Implemented by Department of Health and Family Welfare of Tamilnadu Government

III. Total budget of the program 400 million US $ over a period of 5 years

a. I, II b. I, III c. II, III

d. All of these e. Answer not known

தமிழ்நாடு சுகாதார அமைப்பு சீர்திருத்த திட்டம் பற்றிய சரியான கூற்றுகளை தேர்வு செய்யவும்

I. இது உலக வங்கி ஆதரவுடன் கூடிய திட்டமாகும்

II. தமிழ்நாடு அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையின் மூலம் பலன்களை நோக்கிய திட்டமாக செயல்படுத்தப்படுகிறது.

III. 5 ஆண்டுகளுக்கு திட்டத்தின் மொத்த பட்ஜெட் 400 மில்லியன் அமெரிக்க டாலர்கள்

a. I, II b. I, III c. II, III

d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை

37. The Tamilnadu urban healthcare project was funded by

a. JICA b. AIIB c. ADB d. World Bank e. Answer not known

எந்த நிறுவனம் தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டத்திற்கு நிதியளிக்கிறது

a. JICA b. AIIB c. ADB d. World Bank e. விடை தெரியவில்லை

38. Which of the following are the main components of TNUHP?

I. Upgrading Tertiary Hospitals

II. Strengthening Referral Hospitals

III. Strengthening Hospital Management

IV. Strengthening Primary Health Care in communicable diseases

a. I, II b. III, IV c. I, II, III d. All ofhtese e. Answer not known

பின்வருவனவற்றில் TNUHP இன் முக்கிய கூறுகள்

I. மூன்றாம் நிலை மருத்துவமனைகளை மேம்படுத்துதல்
II. பரிந்துரைக்கப்பட்ட மருத்துவமனைகளை வலுப்படுத்துதல்
III. மருத்துவமனை நிர்வாகத்தை வலுப்படுத்துதல்
IV. தொற்று நோய்களுக்கான ஆரம்ப சுகாதார சேவையை வலுப்படுத்துதல்

a. I, II b. III, IV c. I, II, III d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை

39. Choose the correct statements about Health Help Line

I. 104 Health Helpline is the centralized information system which serves the people through telecommunication in partnership with Tamilnadu
II. It was launched on December 5, 2013
III. It provides Information related to health and health care delivery system

a. I, II b. I, IIIc. II, III d. All of these e. Answer not known

சுகாதார ஹெல்ப்லைன் பற்றிய சரியான கூற்றை தேர்ந்தெடுக்கவும்

I. 104 உதவிஎண் என்பது தொலைத்தொடர்பு மூலம் இணைந்து தமிழக மக்களுக்கு சேவை செய்யும் மையப்படுத்தப்பட்ட தகவல் அமைப்பாகும்.
II. இது டிசம்பர் 5, 2013 அன்று தொடங்கப்பட்டது
III. இது உடல்நலம் மற்றும் சுகாதார அமைப்பு தொடர்பான தகவல்களை வழங்குகிறது

a. I, II b. I, III c. II, III d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை

40. Choose the correct statements about Tamilnadu Health System Project (TNHSP)

I. In 2005, the World Bank Approved this Project for a total cost of Rs.597.15 crores
II. It Focusses on improving the health status of people belonging to the lower socio economic strata

a. I only b. II only c. Both I and II
d. None of these e. Answer not known

தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டம் பற்றிய சரியான கூற்றுகளை தேர்வு செய்யவும்

I. 2005 ஆம் ஆண்டில் உலக வங்கி இந்த திட்டத்திற்கு 597.15 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளித்தது
II. சமூகப் பொருளாதாரத்தில் கீழ் நிலையில் உள்ளவர்களுக்கு தரமான சுகாதார சேவைகளை வழங்குவதற்கு இது உதவுகிறது

a. I மட்டும் b. II மட்டும் c. இரண்டும்
d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

41. Choose the incorrect statements about Tamilnadu Medical Services Corporation (TNMSC)

I. It was setup with the primary objective of ensuring ready availability of all essential drugs and medicines in the Government Medical institutions throughout the state
II. It was established in 1994
III. It commenced its functions of purchase storage and distribution of drugs and medicines from 1996

a. I only b. II only c. III only
d. None of these e. Answer not known

தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் பற்றிய தவறான கூற்றுகளை தேர்வு செய்க

I. மாநிலம் முழுவதும் உள்ள அரசு மருத்துவ நிறுவனங்களில் அனைத்து அத்தியாவசிய மருந்துகள் தயாராக இருப்பதை உறுதி செய்வதை முதன்மை நோக்கமாக கொண்டுள்ளது
II. இது 1994 இல் நிறுவப்பட்டது
III. 1996 முதல் மருந்துகளை கொள்முதல் செய்தல் மற்றும் விநியோகம் செய்தல் ஆகியவற்றின் செயல்பாடுகளை அது கவனிக்கிறது

a. I மட்டும் b. II மட்டும் c. III மட்டும்
d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE

42. Identify the beneficiaries of POSHAN Abhiyaan

I. Children from birth to 6 years

II. Pregnant women

III. Lactating mothers

a. I, II b. I, III c. II, III

d. All of these e. Answer not known

போஷன் அபியான் பயனாளிகளை அடையாளம் காணவும்

I. பிறந்த குழந்தைகள் முதல் ஆறு வயது குழந்தைகள் வரை

II. கர்ப்பிணி பெண்கள்

III. பாலூட்டும் தாய்மார்கள்

a. I, II மட்டும் b. I, III மட்டும் c. II, III மட்டும்

d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை

43. Choose the correct statements

I. In Tamilnadu, Muthulakshmi Reddy was the first women Deputy Speaker of the Legislative Council

II. In Tamilnadu the property rights to women were given for the first time in the country

a. I only b. II only c. Both I and II

d. None of these e. Answer not known

சரியான கூற்றுகளை தேர்ந்தெடுக்கவும்

I. தமிழ்நாட்டின் முதல் பெண் சட்டமன்ற துணை சபாநாயகர் முத்துலட்சுமி ரெட்டி

II. நாட்டிலேயே முதன்முறையாக பெண்களுக்கு சொத்துரிமை வழங்கியது தமிழ்நாடு தான்

a. I மட்டும் b. II மட்டும் c. இரண்டும்

d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

44. Choose the correct statements about Sukanya Samriddhi Yojana

I. It is a small deposit scheme for girl child

II. It was launched as a part of the Beti Bachao Beti Padhao Campaign

a. I only b. II only c. Both I and II

d. None of these e. Answer not known

சுகன்யா சம்ரிதி யோஜனா பற்றிய சரியான கூற்றுகளை தேர்ந்தெடுக்கவும்

I. இது பெண் குழந்தைகளுக்கான சிறு வைப்புத் திட்டம்

II. பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் இயக்கத்தின் ஒரு பகுதியாக இது தொடங்கப்பட்டது

a. I மட்டும் b. II மட்டும் c. I மற்றும் II

d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

45. Choose the correct statements about cradle baby scheme

I. It was launched at Salem

II. It aimed to eliminate the incidence of Female infanticide

III. It enables social empowerment of girl children

a. I, II b. I, III c. II, III d. All of these e. Answer not known

தொட்டில் குழந்தை திட்டம் பற்றிய சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடுக்கவும்

I. இது சேலத்தில் தொடங்கப்பட்டது

II. இது பெண் சிசுக்கொலைகளை ஒழிப்பதை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டது

III. இது பெண் குழந்தைகளின் சமூக அதிகாரம் அளிக்கிறது

a. I, II மட்டும் b. I, III மட்டும் c. II, III மட்டும்

d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை

46. Choose the correct statements about Tamilnadu Chief Ministers Girl Child Protection Scheme

I. It encourages girls to get married only after the age of 18 years

II. Earlier it as Sivagami Ammaiyar Memorial Girld Child Protection Scheme

a. I, II b. I only c. II only d. None of these e. Answer not known

தமிழக முதல்வரின் பெண்குழந்தை பாதுகாப்பு திட்டம் குறித்த சரியான கூற்றைதேர்வு செய்க

I. பெண்கள் 18 வயது, முடிந்த பிறகு திருமணம் செய்வதை ஊக்குவிக்கிறது

II. இந்த திட்டம் இதற்கு முன்பு சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம் என்று அழைக்கப்பட்டது

a. I, II மட்டும் b. I மட்டும் c. II மட்டும் d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

47. Under the Tamilnadu Chief Ministers Girl Child Protection Scheme, the annual income of the family should not exceed Rs. _________

a. 60,000 b. 72,000 c. 120000 d. 150000 d. Answer not known

தமிழக முதல்வர்களின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் குடும்ப ஆண்டு வருமானம் _______ ரூபாய்க்கு மிகாமல் இருக்க வேண்டும்

a. 60,000 b. 72,000 c. 120000 d. 150000 e. விடை தெரியவில்லை

48. Choose the correct statements about the Kudimaramathu scheme

I. It was launched at Manimangalam Village in Kanchipuram district on 13 March 2017

II. It aims to restore the water bodies of Tamilnadu

III. It included maintenance works in Canals, tanks, shutters and reconstruction works

a. I, II b. I, III c. II, III d. All of these e. answer not known

குடிமராமத்து திட்டத்தைப் பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்

I. இது 13 மார்ச் 2017 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மணிமங்கலம் கிராமத்தில் தொடங்கப்பட்டது

II. தமிழகத்தின் நீர்நிலைகளை மீட்டெடுப்பதே இதன் நோக்கமாகும்

III. அதில் கால்வாய்கள் ஏரிகள், சுருள் கதவணை பராமரிப்பு பணிகள் மற்றும் புணரமைப்பு பணிகள் ஆகியவை அடங்கும்

a. I, II மட்டும் b. I, III மட்டும் c. II, III மட்டும்

d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை

APPOLO STUDY CENTRE

49. Choose the correct statements about cradle baby scheme

I. The District Social Welfare officer and extension officers are the officials for availing the information to beneficiaries and also organise camps, conference

II. Because of the implementation of this scheme, child sex ratio was raised from 942/1000 in 2001 to 943/1000 in 2011

a. I only b. II only c. I, II d. None of these e. Answer not known

தொட்டில் குழந்தை திட்டம் பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்

I. மாவட்ட சமூக நல அலுவலர் மற்றும் விரிவாக்க அலுவலர்கள், பயனாளிகளுக்கு தகவல் தெரிவிப்பதுடன், முகாம்கள் நடத்துவதற்கான அதிகாரிகளாக உள்ளனர்.

II. இத்திட்டத்தை அமல்படுத்தியதால், குழந்தை பாலின விகிதம் 2001ல் 942/1000 ஆக இருந்தது, 2011ல் 943/1000 ஆக உயர்ந்துள்ளது

a. I மட்டும் b. II மட்டும் c. I, II மட்டும் d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

50. Choose the correct statements about THAI Scheme

I. It was launched in 2006

II. Aims to provide minimum basic infrastructure facilities to all the habitations in villages

III. Tamil Nadu is the only state focusing on 'Habitation' as the unit of development

a. I, II b. I, III c. II, III d. All of these e. Answer not known

தாய் திட்டம் பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்
I. இது 2006 இல் தொடங்கப்பட்டது
II. இதன் நோக்கம் கிராமங்களில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் குறைந்தபட்ச அடிப்படை கட்டமைப்பு வசதிகளை வழங்க வேண்டும்
III. தமிழ்நாடு வளர்ச்சியின் அலகாக "வாழ்விடத்தை" மையமாகக் கொண்ட ஒரே மாநிலம்
a. I, II b. I, III c. II, III d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை

51. How many pairs are correctly matched?

| Scheme | | Launched Year |
|---|---|---|
| I. | AMMA Thittam | - 2012 |
| II. | AMMA Unavagam | - 2013 |
| III. | AMMA Baby Care Kit | - 2014 |
| IV. | AMMA Kudineer | - 2013 |

a. One pair b. Two pairs c. Three pairs
d. Four pairs e. Answer not known

எத்தனை இணைகள் சரியாகப் பொருந்துகின்றன
I. அம்மா திட்டம் - 2012
II. அம்மா உணவகம் - 2013
III. அம்மா குழந்தை பராமரிப்பு பெட்டகம் - 2014
IV. அம்மா குடி நீர் - 2013
a. ஓர் இணை b. இரு இணைகள் c. மூன்று இணை
d. நான்கு இணை e. விடை தெரியவில்லை

52. Consider the following
Assertion (A): In Tamilnadu April 15 is observed as Transgender Day
Reason (R): To commemorate the day in which the Transgender welfare Board was formed in 2006
a. A and R are true and R is the correct explanation of A
b. A and R are true and R is not the correct explanation of A
c. A is true, R is false
d. A is false, R is true
e. Answer not known

பின்வருவனவற்றை ஆய்க
கூற்று (A): தமிழகத்தில் ஏப்ரல் 15 மூன்றாம் பாலினத்தவர் தினமாக அனுசரிக்கப்படுகிறது
காரணம் (R): மூன்றாம் பாலினத்தவர்களுக்கான நல வாரியம் 2006 இல் உருவாக்கப்பட்ட தினத்தை நினைவுகூரும் வகையில் அனுசரிக்கப்படுகிறது
a. A மற்றும் R சரி மற்றும் R என்பது A விற்கு சரியான விளக்கம்
b. A மற்றும் R சரி மற்றும் R என்பது A விற்கு சரியான விளக்கமல்ல
c. A சரி, R தவறு
d. A தவறு, R சரி
e. விடை தெரியவில்லை

53. Which of the following state is the first state to introduce a transgender welfare policy?
a. Andhra Pradesh b. Tamilnadu c. Gujarat
d. Karnataka e. Answer not known

பின்வரும் மாநிலங்களில் திருநங்கைகள் நலக் கொள்கையை அறிமுகப்படுத்திய முதல் மாநிலம் எது?
a. ஆந்திரப் பிரதேசம் b. தமிழ்நாடு c. குஜராத்
d. கர்நாடகா e. விடை தெரியவில்லை

54. The Integrated child protection scheme was introduced in
a. 1992 b. 1995 c. 2005 d. 2009 e. Answer not known

எப்பொழுது ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது
a. 1992 b. 1995 c. 2005 d. 2009 e. விடை தெரியவில்லை

55. Choose the correct statements about Beti Bachao Beti Padhao
I. It was launched by Government of India in 2016
II. It aimed to address the declining child sex ratio in the districts where it is far below national average
a. I only b. II only c. Both I and II
d. None of these e. Answer not known
பேட்டி பச்சாவோ பேட்டிபாதோ பற்றிய சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடுக்கவும்
I. இது 2016 இல் இந்திய அரசால் தொடங்கப்பட்டது
II. இது குழந்தைப் பாலின விகிதம் தேசிய சராசரியை விட மிகக் குறைவாக உள்ள மாவட்டங்களில் அதிகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
a. I மட்டும் b. II மட்டும் c. I மற்றும் II
d. எதுவும் இல்லை e. விடை தெரியவில்லை

56. P alone can do ½ of a work in 6 days and Q alone can do 2/3 of the same work in 4 days. In how many days working together, will they finish ¾ of the work?
a. 2 days b. 3 days c. 4 days
d. 6 days e. Answer not known
P என்பவர் தனியே ஒரு வேலையின் 1/2 பகுதியை 6 நாள்களிலும், Q என்பவர் தனியே அதே வேலையின் 2/3 பகுதியை 4 நாள்களிலும் முடிப்பர். இருவரும் இணைந்து அந்த வேலையின் ¾ பகுதியை எத்தனை நாள்களில் முடிப்பர்?
a. 2 நாட்கள் b. 3 நாட்கள் c. 4 நாட்கள்
d. 6 நாட்கள் e. விடை தெரியவில்லை

57. From home, Rajan rides on his motorbike at 35 km/hr and reaches his office 5 minutes late. If he had ridden at 50 km/hr, he would have reached his office 4 minutes earlier. How far is his office from his home?
a. 15 ½ km b. 16 ¼ km c. 17 ½ km
d.18 1/3km e. Answer not known
இராஜன் தன் வீட்டிலிருந்து இரு சக்கர வாகனத்தில் மணிக்கு 35 கி.மீ வேகத்தில் சென்று தன்னுடைய அலுவலகத்தை 5 நிமிடம் தாமதமாகச் சென்றடைகிறார். அவர் மணிக்கு 50 கி.மீ வேகத்தில் சென்றிருந்தால், அலுவலத்தை 4 நிமிடம் முன்னதாகவே சென்றடைந்திருப்பார் எனில் அவருடைய அலுவலகம், வீட்டிலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளது?
a. 15 ½ km b. 16 ¼ km c. 17 ½ km
d.18 1/3 km e. விடை தெரியவில்லை

58. X alone can do a piece of work in 6 days and Y alone in 8 days. X and Y undertook the work for Rs.4800. With the help of Z, they completed the work in 3 days. How much is Z's share?
a. Rs. 500 b. Rs. 600 c. Rs.800
d. Rs.1200 e. Answer not known
X என்பவர் தனியே ஒரு வேலையை 6 நாள்களிலும், Y என்பவர் தனியே அதே வேலையை 8 நாள்களிலும் முடிப்பர். X மற்றும் Y ஆகியோர் இந்த வேலையை Rs.4800 இக்கு ஒப்புக் கொண்டனர். Z என்பவரின் உதவியுடன், அவர்கள் அந்த வேலையை 3 நாள்களில் முடித்தனர் எனில், தொகையில் Z இன் பங்கு எவ்வளவு?
a. Rs.500 b. Rs.600 c. Rs.800
d. Rs.1200 e. விடை தெரியவில்லை

59. A tap A can fill a drum in 10 minutes. A second tap B can fill in 20 minutes. A third tap C can empty in 15 minutes. If initially the drum is empty, find when it will be full if all taps are opened together?

a. 10 min b. 12 min c. 15 min
d. 18 min e. Answer not known

A என்ற குழாய் ஒரு பெரிய பாத்திரத்தைத் தனியே 10 நிமிடங்களில் நிரப்பும். B என்ற குழாய் அதே பாத்திரத்தைத் தனியே 20 நிமிடங்களில் நிரப்பும். நீர் நிரப்பியுள்ள அப்பாத்திரத்தை C என்ற குழாய் 15 நிமிடங்களில் காலி செய்யும். ஆரம்பத்தில் பாத்திரம் காலியாக இருந்து, இம்மூன்று குழாய்களையும் திறந்தால், அப்பாத்திரம் நிரம்ப எவ்வளவு நேரமாகும்?

a. 10 நிமிடங்கள் b. 12 நிமிடங்கள் c. 15 நிமிடங்கள்
d. 18 நிமிடங்கள் e. விடை தெரியவில்லை

60. 210 men working 12 hours a day can finish a job in 18 days. How many men are required to finish the same job in 20 days working 14 hours a day?

a. 160 b. 162 c. 164
d. 169 e. Answer not known

210 ஆண்கள் நாளொன்றுக்கு 12 மணி நேரம் வேலை செய்து வேலையை 18 நாள்களில் முடிப்பர். அதே வேலையை நாளொன்றுக்கு 14 மணி நேரம் வேலை செய்து, 20 நாள்களில் முடிக்க எத்தனை ஆண்கள் தேவை?

a. 160 b. 162 c. 164
d. 169 e. விடை தெரியவில்லை

61. Which of the following districts of Tamilnadu received BBBP National Award 2019?

a. Cuddalore b. Dharmapuri c. Namakkal
d. Thiruvallur e. Answer not known

2019 ஆம் ஆண்டிற்கான BBBP தேசிய விருதை தமிழகத்தின் எந்த மாவட்டம் பெற்றது?

a. கடலூர் b. தர்மபுரி c. நாமக்கல்
d. திருவள்ளூர் e. விடை தெரியவில்லை

62. Choose the correct statements regarding the Dhanalaxmi Scheme

I. It was launched by Government of Tamilnadu in 2008
II. It aims to provide a set of staggered financial incentives for families to encourage them for better upbringing of girl child and to educate her

a. I only b. II only c. Both I and II
d. None of these e. Answer not known

தனலக்ஷ்மி திட்டம் தொடர்பான சரியான அறிக்கைகளைத் தேர்ந்தெடுக்கவும்

I. இது 2008 இல் தமிழக அரசால் தொடங்கப்பட்டது
II. பெண் குழந்தைகளை சிறப்பாக வளர்ப்பதற்கும், அவர்கள் கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காகவும் குடும்பங்களுக்கு நிலையான நிதிச் சலுகைகளை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

a. I மட்டும் b. II மட்டும் c. I மற்றும் II
d. எதுவும் இல்லை e. விடை தெரியவில்லை

63. Which was the first state in India and notify the state juvenile justice rules?

a. Tamilnadu b. Andhra Pradesh c. Karanataka
d. Kerala e. Answer not known

இந்தியாவில் மாநில சிறார் நீதி விதிகளை அறிவித்த முதல் மாநிலம் எது?

a. தமிழ்நாடு b. ஆந்திரப் பிரதேசம் c. கர்நாடகம்
d. கேரளா e. விடை தெரியவில்லை

64. Choose the correct statements

I. Out of total area of cultivated land, percentage of non-food crop is greater than food crops.

II. Paddy is major contributor to total amount of food Production in Tamilnadu.

III. After Paddy, Wheat is second most Produced crop in Tamilnadu.

a. II only b. II and III only c. I and II only

d. All the above e. Answer not known

சரியான கூற்றுகளை கண்டறிக

I. சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் மொத்த பரப்பளவில் உணவு அல்லாத பயிர்களின் சதவீதம் உணவுப் பயிர்களை விட அதிகமாக உள்ளது

II. தமிழ்நாட்டின் மொத்த உணவு உற்பத்தியில் நெல் முக்கிய பங்கு வகிக்கிறது

III. நெல்லுக்கு அடுத்து, கோதுமை தமிழ்நாட்டில் அதிகம் உற்பத்தி செய்யப்படும் பயிராகும்

a. II மட்டும் b. II மற்றும் III மட்டும் c. I மற்றும் II மட்டும்

d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை

65. Find correctly matched pairs.

1. Bharat Heavy Electrical Limited – Tiruchirapalli
2. Integrated coach factory – Perambalur
3. Steel Authority of India Limited – Salem
4. Heavy Vehicle Factory – Chengalpattu

a. 1 and 3 only b. 2 and 4 only c. All the above

d. None of the above e. Answer not known

சரியாக பொருந்தியுள்ள இணையைத் தேர்வு செய்க

1. பாரத மிகு மின் நிறுவனம் - திருச்சிராப்பள்ளி
2. ஒருங்கிணைந்த இரயில்பெட்டி தொழிற்சாலை – பெரம்பலூர்
3. இந்திய எஃகு உருக்கு நிறுவனம் - சேலம்
4. கனரக வாகனத் தொழிற்சாலை – செங்கல்பட்டு

a. 1 & 3 மட்டும் b. 2 & 4 மட்டும் c. மேற்கண்ட அனைத்தும்

d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

66. Find correctly matched pairs.

1. Kancheepuram - Silk Sarees
2. Dindigul - Leather
3. Erode - Turmeric
4. Namakkal - Poultry farms
5. Tiruchirapalli - Boiler & Turbine
6. Karur - Bus body building

a. 1, 3 and 4 only b. 1, 3 and 5 only c. 2, 4 and 6 only

d. All the above e. Answer not known

சரியாக பொருந்தியுள்ள இணையைக் காண்க

1. காஞ்சிபுரம் - பட்டுச்சேலை
2. திண்டுக்கல் - தோல்
3. ஈரோடு - மஞ்சள்
4. நாமக்கல் - கோழிப்பண்ணை
5. திருச்சி - கொதிகலன் மற்றும் விசையாழி
6. கரூர் - பேருந்து மேற்புற கட்டமைப்பு

a. 1, 3 மற்றும் 4 மட்டும் b. 1, 3 மற்றும் 5 மட்டும் c. 2, 4 மற்றும் 6 மட்டும்

d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை

APPOLO STUDY CENTRE

67. Choose the correct statements

1. Major leather producing clusters are around Vellore, Erode, Chennai, Dindigul, Ranipet.
2. Vellore is top exporter of finished leather goods in country.
3. Tamilnadu has 60% of all leather tanning capacity in country.

a. 1, 2 and 3 only b. 1 and 2 only c. 2 and 3 only
d. 1 and 3 only e. Answer not known

சரியான கூற்றுகளை கண்டறிக

1. அதிக தோல் உற்பத்தி தொகுப்புகள் வேலூர் ஈரோடு, சென்னை, திண்டுக்கல், இராணிபேட்டை ஆகியவற்றை சுற்றியுள்ளன
2. வேலூர் நாட்டின் சிறந்த தோல் பொருட்களின் உற்பத்தி இடமாகும்
3. நாட்டின் தோல் பதனிடும் திறனில் 60% ஐ தமிழ்நாடு கொண்டுள்ளது

a. 1, 2 மற்றும் 3 மட்டும் b. 1 மற்றும் 2 மட்டும் c. 2 மற்றும் 3 மட்டும்
d. 1 மற்றும் 3 மட்டும் e. விடை தெரியவில்லை

68. Special Economic Zone of ELCOT has been setup in ___ areas.

a. 3 b. 5 c. 8 d. 10 e. Answer not known

ELCOTஇன் சிறப்பு பொருளாதார மண்டலம் _______ பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளது

a. 3 b. 5 c. 8 d. 10 e. விடை தெரியவில்லை

69. Choose the correct answer.

I. Startup India scheme was started on 16 January 2016.
II. It facilitates bank loan of Rs. 10 lakh to Rs. 1 crore to at least one SC/ST borrower per bank branch for setting up a greenfield enterprise.

a. I only b. II only c. Both I and II
d. None of above e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் சரியான கூற்றுகளை கண்டறிக

I. ஸ்டார்ட்அப் இந்தியா திட்டம் 2016, ஜனவரி 16இல் தொடங்கப்பட்டது
II. இது புதிய நிறுவனத்தை அமைப்பதற்கு, குறைந்தபட்சம் ஒரு பட்டியல் இனத்தவர் / பழங்குடி இனத்தவர் கடன் வாங்குபவருக்கு ரூ.10 லட்சம் முதல் 1 கோடி ரூபாய் வங்கிக்கடனை எளிதாக்குதல்

a. I மட்டும் b. II மட்டும் c. I & II இரண்டும்
d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

70. Match following with correct options.

A. Bauxite — 1. Thoothukudi
B. Lignite — 2. Salem
C. Molybdenum — 3. Cuddalore
D. Monazite — 4. Dharmapuri

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 4 | 3 | 2 | 1 |
| c. | 2 | 3 | 4 | 1 |
| d. | 2 | 1 | 4 | 3 |

e. Answer not known

பொருத்துக

A. பாக்சைட் — 1. தூத்துக்குடி
B. லிக்னைட் — 2. சேலம்
C. மாலிப்டினம் — 3. கடலூர்
D. மோனோசைட் — 4. தர்மபுரி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 4 | 3 | 2 | 1 |
| c. | 2 | 3 | 4 | 1 |
| d. | 2 | 1 | 4 | 3 |

e. விடை தெரியவில்லை

71. Choose the correct statements about Ramalinga Adigal.
i. He popularized Jeevakarunyam – to show compassion on all living things.
ii. He established Samarasa Sanmarga Sangam in 1865.
iii. He established Sathya Gnana Sabha at Vadalur.
iv. He wrote Manu murai kanda vaasagam.
v. His works were called 'Marutpa'
a. i, iii only b. ii and iv only c. i, ii, iii, iv only
d. All of these e. Answer not known
இராமலிங்க அடிகள் குறித்த சரியான கூற்றுகளை தேர்க
i. எல்லா உயிர்களிடமும் இரக்கம் காட்ட அவர் ஜீவகாருண்யத்தை பிரபலப்படுத்தினார்
